சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. 96/2013

பெயர்: சுப்பிரமணியன் பி.வா.சா.1 தேதி **07.02.2026**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனக்கு தற்பொழுது 71 வயது. ஆண்டி முத்துராஜாவின் மகன்கள் முறையே ரத்தினம், மருதமுத்து, சுரும்பாயி, ராஜலிங்கம். ரத்தினம் தனியாக சொத்தும் வாங்கியுள்ளார். வீடும் கட்டியுள்ளார். அவ்வாறே மற்றவர்களான ராஜலிங்கம், மருதமுத்து சொத்து வைத்துள்ளார்களா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் உள்ள வீட்டில் தான் என் அப்பா இருந்து, இறந்துவிட்டார். மேற்படி வழக்கு சொத்தில் உள்ள இரண்டு வீடுகளும் மெத்தை வீடுகள் என்றால் சரிதான். மேற்படி இரண்டு வீடுகளும் பூர்வீக சொத்தில் கட்டப்பட்டதா என்றால் ஒரு வீடு நத்தத்தில் என்னால் கட்டப்பட்டது. மற்றொரு வீடு பூர்வீக வீடு. வழக்கின் முதல் வாதி எனது தங்கை. 2-ம் பிரதிவாதி எனது அக்கா. முதல் வாதிக்கு திருமணம் செய்த காலக்கட்டத்தில் எனது வயது 25. அக்காலக்கட்டத்தில் எனக்கு என்ன வேலை என்றால் நான் பழைய ஜெயங்கொண்டம் சோழபுரத்தில் உள்ள பஞ்சாயத்தில் உள்ள வாரச்சந்தையை குத்தகைக்கு எடுத்து தொழில் செய்து வந்தேன். மேற்படி சந்தையில் என்ன தொழில் செய்து வந்தேன் என்றால் அரிசி வியாபாரம் செய்து வந்தேன். மேற்படி சந்தை வாரம் ஒரு முறை கூடும். அதற்காக இரசீது உண்டா என்றால் உள்ளது. நான் ஆடு, மாடு வளர்த்து வேலை செய்தேன். பால் வியாபாரம் செய்தேன். மேற்படி ஆடு, மாடுகளை வழக்கு சொத்தில் உள்ள நிலத்தில் மேயவிட்டேனா என்றால் இல்லை. வேறு பகுதியில் மேய விட்டேன். நான் வேறு என்ன வேலை செய்து வந்தேன் என்றால் நில புரோக்கர் மற்றும் தரகு வேலை செய்தேன். மேலே சொன்ன தொழில் தவிர வேறு எந்த தொழிலும் செய்யவில்லை. நான் மேலே சொன்ன தொழில்கள் மூலமாக வருமான பார்த்தேன் என கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. எனக்கு விவசாய வருமானத்தை தவிர வேறு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5-ல் கண்டுள்ள வழக்கு சொத்தை விவசாய வருமானம் மூலம் தான் பெற்றேன் என்றால் சரியல்ல. மேற்படி தொழில் செய்து வந்ததற்காக வருமான வரி செலுத்தவில்லை. பி.வா.ஆ.5-ல் உள்ள தொகையினை வருமான வரி செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. விவசாயத்தின் மூலம் மேற்கண்ட தொகை கிடைக்கப்பெற்றதால் தான் மேற்படி தொகையினை வருமான வரி கணக்கில் செலுத்தவில்லை என்றால் சரியல்ல.

என் தகப்பனார் ராஜலிங்கத்திற்கு பிரித்து கொடுக்கப்பட்ட நிலங்கள் எவ்வளவு இருக்கும் என்றால் 2-1/2 ஏக்கர். மேற்படி நிலத்தில் என்ன பயிரிடுவோம் என்றால் நெல் பயிரிடுவோம். அது பணப்பயிர் செய்யக்கூடிய நிலம் என்றால் சரிதான். ஆனால், அது தண்ணீர் வடியக்கூடிய நிலமாக இல்லை என்பதால் நெல் மட்டும் தான் பயிரிட முடியும். எனது தகப்பனாருக்கு 2-1/2 ஏக்கர் நிலம் மட்டும் தான் ஒதுக்கப்பட்டது என்கின்ற சங்கதியும், அது தண்ணீர் வடியக்கூடிய நிலம் என கூறுவதும் உண்மையில்லை என்றால் சரியல்ல. பிராதின் சொத்து விபரத்தில் சொல்லியுள்ள சொத்துக்களின் பெயர்கள் சரியானவை என்றால் சரிதான். மேற்படி சொத்தில் நடுத்தார் நிலம் (9-வது அயிட்ட சொத்து) தற்பொழுதும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தை யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். முதல் வாதி சகுந்தலா வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னர் அவருக்குரிய பாகத்தை பிரித்துக்கொடுக்கக்கோரி அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார். மேற்படி அறிவிப்பு எனது அப்பா இறந்ததற்கு பின்னர் அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பினேன். முதல் வாதி மற்றும் இரண்டாவது பிரதிவாதிக்கு எனது தகப்பனார் தான் சீர் வரிசை செய்து திருமணம் செய்து கொடுத்தார் என்றால் நானும் தான் செய்தேன். திருமணத்திற்கு பின்னிட்டு மேற்படி முதல் வாதியும், இரண்டாவது பிரதிவாதியும் வழக்கு சொத்திற்கு வந்து, விவசாயம் செய்து வருவார்கள் என்றால் சரியல்ல. முதல் வாதிக்கு சொத்து எதுவும் கொடுத்தோமா என்றால் பணமாக கொடுத்தோம். ரூ.50,000/- பணம் மற்றும் 10 பவுன் நகை கொடுத்தோம். மேற்படி பணம் மற்றும் நகை திருமணம் முடிந்த 10, 15 ஆண்டுகள் கழித்து கொடுக்கப்பட்டது. மேற்படி சங்கதியை பதில் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். பி.சா.ஆ.1 ஆவணம் யாருக்கு, யாரால் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் நான் சகுந்தலாவிற்கு எழுதிக்கொடுக்கப்பட்டது. எனது அப்பா உயிருடன் இருக்கும்பொழுது எழுதி கொடுக்கப்பட்டது. பி.சா.ஆ.1 மற்றும் முதல் வாதியின் கையொப்பம் உள்ள வக்காலத்தில் உள்ள கையெழுத்தும் வித்தியாசம் உள்ளதா என்றால் வித்தியாசம் இல்லை. 2-ம் பிரதிவாதியிடம் பி.வா.சா.ஆ.1 போன்று ஆவணம் எதுவும் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணம் முதல் வாதியால் எழுதி கொடுக்கபடவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்தும் முதல் வாதியுடையது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விவரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். முதல் வாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பில் பி.வா.சா.ஆ.1 ஆவணம் பற்றி கூறவில்லை என்று சொன்னால் கூறியுள்ளேன். மேற்படி பதில் அறிவிப்பில் வாய்மொழியாக விடுதலை செய்து

கொடுத்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனைவி வீட்டு வேலை மட்டும் தான் செய்து வருகிறார் என்றால் பால் வியாபாரமும் செய்து வருகிறார். எனது மகன் சக்திவேலுக்கு தற்பொழுது 40 வயது என்றால் சரிதான். 2008-ம் ஆண்டு எனது மகன் சக்திவேல் என்ன வேலை பார்த்து வந்தார் என்றால் இரும்பு வெல்டிங் பட்டறையில் வேலை பார்த்து வந்தார். எனது மனைவிக்கோ, மகனுக்கோ தனிப்பட்ட முறையில் வருமான எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தை கொண்டு தான் மனைவி மற்றும் மகன் பெயரில் சொத்து கிரையம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. ச.எண்.113/1 ஏக்.1.13 செண்ட் பூமியை முத்துசாமி என்பவருக்கு கிரையம் கொடுத்ததாக கூறியுள்ளேன். மேற்படி முத்துசாமிக்கு கிரையம் கொடுத்தது வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்பு தான். மேற்படி முத்துசாமி வழக்கிற்கு அவசிய தரப்பினர் இல்லை என்றால் சரியல்ல. தாவா 14 முதல் 16 இலக்க சொத்துக்கள் இதர தாவா சொத்துக்களிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தை கொண்டு தான் பெறப்பட்டது என்றால் சரியல்ல. மேலே சொன்ன சொத்தை நான் குத்தகைக்கு பெற்று அனுபவம் செய்து வந்ததாக கூறுவதற்கு ஆதரவாக ஆவணங்கள் உண்டா என்றால் இல்லை. பின்னர் நான் அதை கிரையம் பெற்றுக்கொண்டேன். மேற்படி சொத்தை குத்தகை மூலம் கிடைக்கப்பெற்ற பணத்தை கொண்டு கிரையம் பெற்றமாக கூறக்கூடியது உண்மையில்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை வேறு சில சொத்துக்களிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தை கொண்டே கிரையம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் எதனினும் குத்தகை சொத்து உண்டா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் முதல் வாதிக்கு உரிமை உண்டு என்றாலும், அவரை சொத்திலிருந்து வெளியேற்றி விட்டேன் என கூறுவதும் உண்மையில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினை வாதிகளும் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதிகளுக்கு பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.02.07 15:44:25 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.